புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 - வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# எட்டயபுர மன்னர்களின் வாழ்வியல்

வீ. சௌந்தர்யா
பதிவு எண்: 21122014022024, முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழாய்வு மையம்,
ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி,
தூத்துக்குடி- 628002.
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் அங்கீகாரம் பெற்றது,
அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி 12,
தமிழ்நாடு, இந்தியா.

அ. விஜயலட்சுமி,
நெறியாளர் & உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை & தமிழாய்வு மையம்,
ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி,
தூத்துக்குடி 628002.

*ஆய்வுச் சுருக்கம்:*

*மன்னர்கள் இயல்பாக ஈகை குணம் உடையவர்களாகவும், மக்கள் நலன் பேணும் திறனுடையவர்களாகவும், இருப்பார்கள். அவ்வகையில் எட்டயபுர மன்னர்களின் வீரம் மக்களுக்கான நிவாரணங்கள், புலவர்களைப் போற்றும் மாண்பு மன்னர்களின் எளிமை, அவர்களின் கலை உணர்வு எத்தன்மையது என்பதை ஆராயும் நோக்கில் இவ்வாய்வு அமைகிறது.*

*முன்னுரை:*

*"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்*
*எஞ்சாமை வேந்தர்க் கியல்பு".[1]*

*இந்த நான்கு பண்புகளும் அரசனுக்கு இன்றியமையாதது என்கிறார் வள்ளுவர்.*

*அது போன்றே ஒரு அரசன் இவ்வாறு தான இருக்க வேண்டும், என்று இலக்கியங்களும் எடுத்தியம்புகின்றன. இலக்கியங்கள் எடுத்தியம்பும் பண்புகளுக்கு இணங்க தங்களின் வாழ்வினையும், ஆட்சியினையும் முறைப்படுத்தி வாழ்ந்தவர்கள் எட்டயபுர மன்னர்கள். அவர்களின் வாழ்வியல் நிலைகளை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாக உள்ளது.*

*எட்டயபுர மன்னர்களின் வாழ்வியல்:*

*வாழ்வியல் என்பது மனிதனின் அன்றாட செயல்பாடுகள், பழக்கங்கள், பொழுதுபோக்குகள், உறவாடல்கள், வேலை, குடும்ப சுழற்சிகள் ஆகியவற்றை குறிக்கிறது. மன்னர்களின் வாழ்வியல் என்பது, மக்கள் நலன் பேணுவதிலும், வீரதீர செயல்களைச் செய்தல், மக்களுக்கு கொடை வழங்குதல் ஆகியவற்றை சார்ந்து இருக்கிறது. எட்டயபுர மன்னர்கள் மக்களை நல்ல முறையில் நடத்தி வந்தனர். அரசிகள் தங்கள் மக்களை பிள்ளைகளாக பாவித்து கண்கள் போல காத்து வந்த காரணத்தால், மக்கள் எட்டப்பன் என்ற பெயர் வை த்து அழைத்து வந்தனர்.*

*அதே போல, எட்டயபுர அரசர்கள் மீது மக்களுக்கும் பெரும் அன்பு இருந்தது. அந்த காலத்தில் தங்கள் நிலத்தில் விளையும் நெல் தானியங்களை அரசரின் களஞ்சியத்திற்கு வழங்கும் வழக்கம் இருந்தது. அவரவர் தங்களால் இயன்ற அளவில் லாபம் 1, 2, 3, என அளிப்பார்கள். இந்த கணக்கில் 8க்குப் பதிலாக மகாராஜா என்று மக்கள் கூறி வந்துள்ளனர்.*

*எட்டு என்பது அரசரின் பெயரில் வருவதால் அந்த எண்ணை மக்கள் வாயால் கூற விரும்பவில்லை. அது அரசருக்கு அளிக்கும் அவமரியாதையாக மக்கள் கருதினர்.மேலும், எட்டப்ப மன்னர்கள் மிகவும் எளிமையானவர்கள் என தி.க சண்முகம் அவர்கள்,*

*“காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்*

*மிக்கூறும் மன்னன் நிலம்”*[2]

*இந்தக் குறள் எட்டப்ப மன்னர்களுக்கு பொருத்தமானதாக இருக்கும் என தனது நாடக வாழ்க்கை என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.*

*புலவர்களைப் போற்றும் மாண்பு:*

*அரசர்கள் புலவர்களைப் போற்றிப் பாதுகாத்தனர். தன்னுடைய ஐந்தாவது வயதில் தாயை இழந்து தவித்த பாரதி, ஏழு வயது முதலே கவிதையால் கர்ஜிக்கத் தொடங்கினார். இவருக்கு வயது 11 இருக்கும் நிலையில் “எட்டப்ப நாயக்க மன்னன் இவருடைய கவித்திறனை மெச்சி, கலைமகள் எனப் பொருள்படும் பாரதி என்ற பட்டம் வழங்கினார். மகாகவி சுப்ரமணிய பாரதியார் ஒரு கவிஞனாக மட்டும் இல்லாமல் ஒரு சிறந்த எழுத்தாளராகவும் நல்ல பத்திரிக்கை ஆசிரியராகவும் இருந்தவர்.*

*“பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்*

*பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்”.*[3]

*என்று பெண்ணுரிமைக்காவும்,*

*“சாதிகள் இல்லையடி பாப்பா குலத்தாழ்ச்சி*

*உயர்ச்சி சொல்லல் பாவம்”*[4].

*என்று தீண்டாமை ஒழிப்பு குறித்தும் தன்னுடைய எழுத்துக்களின் மூலம் மக்களின் மனதில் விடுதலை உணர்வை ஊட்டியவர் பாரதியார். எட்டயபுரத்திற்கு அருகில் உள்ள நாகலாபுரத்தில் தங்கி இருந்து நறுமணப்பொருள் உற்பத்தி செய்து குறுநில மன்னர்களுக்கு விற்று வந்தவர் உமறுப்புலவர்.*

*“விளையும் பயிர் முளையிலே தெரியும்”*[5].

*என்ற பழமொழிக்கு இணங்க, கல்வியிலும் மெய்ஞானத்திலும் ஒழுக்கத்திலும் உயர்ந்து விளங்கும் உமறுவின் திறத்தினை எட்டயபுர மன்னர் வேங்கடேச பூபதி கண்டார். உடனே தனது அவைக்களப் புலவரான தமிழ் மேதை கடிகை முத்துப் புலவரிடம் தமிழ்ப்பாடங்களைச் சொல்லித் தரும்படி கூறினார். உமறுவும் கற்பன கற்று, கேட்பன கேட்டுப் புலமையிற் சிறந்து விளங்கினார்.*

*மேலும், பன்மொழிப்புலமையுடன் மந்திர தந்திரங்களில் வல்லமை பெற்ற வாலைவாருதி எனும் வடபுலப் புலவர் பல அரசவைகளுக் சென்று, அங்கிருந்த புலவர்களை வாதுக்கிழுத்து வெல்லும் ஆணவம் கொண்டவர். அவர் எட்டப்பர் அவைக்கும் வந்து அவைக்களப் புலவரை வாதுக்கிழுத்தார். வாதும் தொடங்கியது. “வாலைவாருதி” கடகத்தை சுழற்றினார். “வாலைவாருதியென்றறியாயோ பின்னாய்” என்ற ஒலி எழுந்தது உமறு எழுத்தாணியைத் தரையில் எறிந்தார்.*

*அது,*

*“சமரதுர கத்துங்க மனருஞ்ச பா சென்று*

*சுரிசமா சன மீதிலே*

*அமரவொரு தரகொம்பு தினமஞ்சு மாசெல்லும்*

*அமுதகவி ராஜனாவே........ ’*[6]

*என்று முழங்கியது.*

*உமறுவின் உள்ள உறுதியையும் அருட்திறத்தையும் உணர்ந்த வாலை வாருதி தன்னுடைய தோல்வியை ஒப்புக கொண்டார். உமறுவின் திறங்கண்டு மகிழ்ந்த எட்டயபுர மன்னரும் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தார். சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துச்சாமி தீட்சிதரையும் ஆதரித்து தங்களின் அவைக்களப் புலவராக ஆதரித்தனர்.*

*“அறன் அறிந்து ஆன்றுஅமைந்த சொல்லான் எஞ்ஞான்றும்*

*திறன் அறிந்தான் தேர்ச்சித் துணை”*[7]

*என்னும் குறட்பாவிற்கு இணங்க எட்டயபுர மன்னர்கள் தேர்ந்த புலவர்களை தனக்கு துணையாகக் கொண்டிருந்தனர்.*

*வீரம்:*

*அஞ்சாமை அரசனுக்கு இருக்க வேண்டிய முக்கிய அம்சமாக இலக்கியங்கள் கூறுகின்றன. தமிழ் மன்னர்களும் வீரத்திலும் தீரத்திலும் சிறந்து விளங்கினர் என்று பல்வேறு இலக்கியங்களும் சான்று பகர்கின்றன.*

*“புகழ் எனின் உயிரும் கொடுக்குவர் பழிஎனின்*

*உலகுடன் பெறினும் கொள்ளலா”*

*“மறங்கொள் வயல்புலி வாய்பிளந்து பெற்ற*

*புலை வெண்பல் தாலி”.*[8]

*வீரத்திலும் சிறந்து விளங்கியவர்கள் எட்டயபுர மன்னர்கள், விஜயநகரை ஆண்ட சாம்பு மகாராஜாவை காண நல்லம நாயக்கர் சென்றிருந்தார். சாம்பு ராஜாவின் அரண்மனையை சோமன் எனும் மல்யுத்த வீரன் காவல் காத்து வந்தான்.*

*சாம்புவை காணவரும் யாராக இருப்பினும் வாசலில் கட்டப்பட்டிருக்கும் தங்க சங்கிலியை தலை குனிந்து வணங்கி தான் செல்ல வேண்டும். அந்த சங்கிலியின் ஒரு புறம் சோமனின் காலிலும், மற்றொரு முனை தூணிலும் கட்டப்பட்டிருக்கும். வணங்கி இப்படி செல்ல விருப்பம் இல்லாதவர்கள் சோமனுடன் மல்யுத்த போட்டியில பங்கேற்று வென்று செல்ல வேண்டும். இது சாம்பு மற்றும் சோமனின் பெருமையாக இருந்து வந்தது. மகாராஜாவைக் காணவரும் மக்கள் குறுநில மன்னர்கள் இந்த முறையிலே சாம்பு மகாராஜாவை தரிசித்துச் சென்றனர். இதற்கு நல்லம நாயக்கர் மனம் ஒப்பவில்லை. சோமனுடன் மல்யுத்தம் செய்து சாம்புவை தரிசிக்க முடிவு செய்தான். யாராலும் வெல்ல முடியாத மாவீரன் என்ற பெயர் சோமனுக்கு இருந்தது. எனவே மல்யுத்த போட்டியைக் காண மக்கள் திரண்டனர்.*

*“சண்டையின் முடிவில் நல்லம நாயக்கர் சோமனின் தலையை துண்டித்து போட்டியில் வென்றார்”.*[9]

*சாம்பு அரசரை காண சோமனின் தலையை ஒரு கையிலும், இரத்த கறை காயாத தனது உடையை மறுகையிலும் ஏந்திச் சென்றார் நல்லம் நாயக்கர் . தானறிந்த மாவீரனின் தலையை கொய்து வென்று வந்த நல்லம நாயக்கரை கண்டு வியந்தார். சாம்பு அரசர் நல்லமனின் வீரத்தை பாராட்டி நீ சிறந்த வீரன் என புகழ்ந்தார். மேலும் தனக்கு கீழிருந்த சில கிராமங்களையும் பரிசு பொருட்களையும் அளித்தார் சாம்பு அரசர்.*

*“இருபெரு வேந்தரும் ஒருகளத் தவிய*

*வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்தாள்*

*கண்ணார் கண்ணிக் கரிகால் வளவள்”*[10]

*“இடவன் கை கெச்சிலப்ப நாயக்கர் 1615 ல் அரியாசனம் ஏறினார். இவர் புகழ்மிக்க வீரராவார். வீரதீர மிக்க செயல்களைப் புரிவதில் மிகச்சிறந்த திறமைசாலி”*[11] *. இவருக்கு இடவன் கை என்ற பட்டப்பெயர் வந்ததற்கே அவருடைய வீரச் செயலே காரணமாகும்.*

*இவர் கோலார்பட்டி கிராமத்திற்கு அருகே ருக்முஞ்சி என்ற குக்கிராமத்திற்கு வேட்டையாடச் சென்றார். அவ்போது அங்குள்ளவர்களுடன் எல்லைதாவா*

*ஏற்பட்டு அது சண்டையாக முற்றியது. இந்தச் சண்டையில், கெச்சிலப்ப நாயக்கர் எதிரி குதிரையையும், குதிரை மீதிருந்த எதிரி வீரனையும் தனது இடது கையிலுள்ள வாளால் ஒரே வெட்டில் வெட்டிச் சாய்த்தார். இவருக்கு இடவன் கை கெச்சிலப்ப நாயக்கர் என்ற பெயர் வந்தது. இதற்குப் பின்பும் பல்வேறு போரில் வெற்றியை தழுவியதால், இவரது வீரத்தைப் பாராட்டி மதுரை மன்னர் இவருக்கு குருமலையை ஒட்டிய சில கிராமங்களை வழங்கினார். கங்கை கொண்டானை ஆட்சி புரிந்த ஜெகவீர பாண்டியனின் படை வீரர்களும், குமாரமுத்து எட்டப்ப நாயக்கரின் போர் வீரர்களும் ஒன்றிணைந்து முதுகுடி நாட்டின் மீது படையெடுத்தார்கள். இப்போரில் முதுகுடிநாடு தோல்வியுற்றது. இவ்வாறு பல இடங்களில் போர் புரிந்து வெற்றிகளை நிலை நாட்டினர் எட்டயபுர மன்னர்கள்.*

*மக்களின் கலை உணர்வு:*

*கலைஞர்களைப் பாராட்டுவது அரச மரபு. ராஜா, மகாராஜா, ஜமீன்தார் இருந்த காலத்தில் வாழை இலையின் மீது மண்பானையை கவிழ்த்தி அதன் மேல் நடனம் ஆடும் பேரணி என்னும் சித்திர நாட்டியம் ஆடிய கொல்லம்பட்டி பொன்னம்மாளைப் பாராட்டி ஆயிரம் பொன் பரிசாகக் கொடுக்கப்பட்டது.*

*"மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க*

*துன்பத்துள் துப்பாயர் நட்பு"*[12]

*என்ற குறளின் கூற்றுக்கு இணங்க தனக்கு உதவிய எட்டயபுர மன்னர்களை என்றும் மறக்க முடியாது என்று தி.க. சண்முகம் தன்னுடைய "எனது நாடக வாழ்க்கை" எனும் நாடக நூலில் குறிப்பிட்டுள்ளார்.*

*"பாணர் தமிழை மலையளவும் புலவர்*

*பூ நுதல் யானையொரு புனைதேர் பண்ணவும்*

*அறனோ மற்றிது விறன் மாண்டு குடுசி*

*இன்னா வாகப் பிறர் மண் கொண்*

*புனிய நின்னார்வலர் முகத்தே"*[13]

*என்ற பாடல் வரிக்கு இணங்க நாடகக் கலையில் தேர்ச்சி பெற்ற கலைஞர்களுக்கு கழுத்துச் சங்கிலி, காப்பு போன்ற அணிகலன்கள் பரிசுப் பொருளாக கொடுத்துள்ளனர். இந்த உன்னதமான பண்பு சங்க காலத்தில் கலைஞர்களைப் பேணிய புரவலர்களை நினைவூட்டுகிறது.*

*சாத்தூரில் நடந்த மனோகரா நாடகத்தின் போது சின்னண்ணா உடுத்தியிருந்த புடவை மன்னரின் மனதிற்கு திருப்தியளிக்கவில்லை. வசந்த சேனை இம்மாதிரிப் புடவைய உடுத்திக் கொள்வதா என அவருக்குத் தோன்றியது. தன் மனைவியின் காதில் ஏதோ ரகசியமாயச் சொன்னார். அந்த அம்மையார் காருக்குச் சென்று சாதாரண புடவையை உடுத்திக் கொண்டு திரும்பி வந்தார்.*

*மன்னரின் மனைவி உடுத்தி இருந்த விலை உயர்ந்த பட்டுப்புடவை சின்னண்ணாவுக்குப் பரிசாக வழங்கப்பெற்றது. அடுத்த காட்சியில் அதை உடுத்திக் கொண்டு வரும்படியாக கட்டளை பிறந்தது. எட்டயபுர மன்னர்கள் மிகுந்த கலை ஆர்வம் மிக்கவர்களாய் இருந்துள்ளனர்.*

*"ஒரு முறை மனோகரன் நாடகத்தில் உள்ள சங்கிலிருக்கும் காட்சியை அந்த அரங்கிலே நடிக்கச் சொன்னார்கள், ஒப்பனை இல்லை, சங்கிலி இல்லை இரண்டு பேர் மேல் துண்டை என் கைகளிலே கட்டியிழுத்துப் பிடித்துக் கொண்டார்கள். நான் எப்படியோ ஒரு வகையாக நடித்தேன்"*[14].

*அதற்குப் பரிசாக அரசர் தன் பேரனின் கையில் இருந்த மோதிரத்தை கழற்றி தனக்கு கொடுத்ததாகவும், மன்னரின் கலையுணர்வை எண்ணி இன்றும் பெருமகிழ்ச்சி அடைகிறேன் என்றும் எனது நாடக வாழ்க்கை என்னும் நூலில் கூறியுள்ளார். இசையினை ரசிப்பவர்களாயும், இசைப்புலமை மிக்கவர்களாயும் எட்டயபுர மன்னர்கள் இருந்துள்ளனர்.*

"குரல் துத்தம்

கைக்கிளை உழை இளி விளரி தாரம்"[15].

என்ற பண்களைப் பற்றி சிலப்பதிகாரம் கூறுகிறது.

தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம் என்ற மும்மொழி உணர்ந்தவர் வெங்கடேஸ்வர எட்டப்ப ஐயன். இவரை இசைக்கலையின் முன்னோடி எனலாம். சுப்புகுட்டி அய்யா, மீனாட்சி சுந்தர அய்யா, சுப்பிரமணிய அண்ணா தேசிங்கு பாகவதர், மதுரை நாமய்யா போன்ற வித்துவான்களும் வெங்கடேஸ்வர எட்டப்ப ஐயனின் அவையை அலங்கரித்துள்ளனர். வெங்கடேஸ்வர எட்டப்ப நாயக்கர் வீணை, ஸ்வரபதி, ஸீத்தார், ஜலதரங்கம், மிருதங்கம் முதலிய இசைக் கருவிகளை இசைப்பதிலும் சிறந்து விளங்கியுள்ளார். இவரே இரண்டாம் நாரதர் என்று அழைக்கப்பட்டவர்.

"மத்திய கால பல்லவி பாடும் முறை எளிமையாக முத்துக்கள் கோர்த்த

மாதிரி சுவாரசியமாக இருக்கும்".

என்ற இக்கூற்று எட்டப்ப நாயக்கரின் இசைப்புலமையை விளக்குகிறது.

தொகுப்புரை:

மன்னர்களின் இயல்புக் குணங்களில் முக்கியமான ஒன்று ஈகைக் குணம். அதிலும் உணவு, நீர் என்பது மனிதன் வாழ்வதற்கு மிகவும் இன்றியமையாதது. ஆதனை உணர்ந்த எட்டயபுர மன்னர்கள் மக்களுக்கு ஏற்ற வகையில் நிவாரணங்களைச் செய்து வந்தனர். மக்களோடு மக்களாகவே இயல்பான எளிமையான வாழ்க்கையினை வாழ்ந்து வந்தனர். மன்னர்களுக்கு அடையாளமாக விளங்குவது வீரமாகும். வீரத்திலும் எட்டயபுர மன்னர்கள் சிறந்து விளங்கினர். புலவர்களுக்கு ஏற்ற மரியாதையை கொடுத்தும், அவர்களுக்கு தக்க சன்மானத்தை அளித்தும் மதிப்புடன் நடத்தினார்கள் புலவர்களும் அதற்கு தக்கவாறு மன்னர்களுக்கு பெருமை தேடித் தந்தனர். மன்னர்கள் கலை உணர்வு மிக்கவர்களாகவும், கலைகள் வளர்வதற்கு உறுதுணையாகவும் கலை வளர்ச்சிக்கு உதவியும் செய்துள்ளனர்.

.

முடிவுரை:

எட்டயபர மன்னர்களின் கொடைத்தன்மை, புலவர்களைப் போற்றும் மாண்பு, கலை ஆர்வம், மன்னர்களின் வீரம், எளிமை ஆகியவை இக்கட்டுரையின் மூலம் விளக்கப்பட்டுள்ளது.

மேற்கோள்கள்:

1. பரிமேலழகர் உரை, திருக்குறள், பா.எண் - 388,

கௌரா பதிப்பகம் சென்னை.

2. பரிமேலழகர் உரை, திருக்குறள் பா. எண் - 386,

கௌரா பதிப்பகம் சென்னை.

3. பாரதி நூல்கள் ·https: //Bharathi Kavithai.Com

4. பாரதி நூல்கள் ·https: //Bharathi Kavithai.Com

5. பழமொழி, www.Tamil Pazha Mozhigal.com

6.எட்டயபுரப்பள்ளு, பூமிநாக நாதன், பா.எ.12

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 113

7. பரிமேலழகர் உரை, திருக்குறள், பா.எண் 635

கௌரா பதிப்கம்

8. புறநானூறு பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி பா. என் 182

திருநெல் வலி தென்னிந்திய சைவசித்தா நூற்பதிப்புக் கழகம், சென்னை, 9.

*9. சதாசிவம் மற்றும் பிறர், எட்டயபுரவரலாறு, ப. 3*

*சரஸ்வதி அச்சகம் கோவில்பட்டி*

*10. புலவர் கா.கோவிந்தம், தமிழக வரலாறு கரிகாற் பெருவளத்தான்,*

*பொருநராற்றுப்படை, பா.எ.135*

*11. சதாசிவன் மற்றும் பிறர், எட்டயபுர வரலாறு ப.33*

*சரஸ்வதி அச்சகம் கோவில்பட்டி*

*12. பரிமேலழகர் உரை, திருக்குறள் பா.எண் 106,*

*கௌரா பதிப்பகம் சென்னை 13.*

*13. புறநானூறு, பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி பா.எ. 18.*

*திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை,*

*14. சதாசிவன் மற்றும் பிறர் எட்டயபுர வரலாறு, ப. 5*

*சரஸ்வதி அச்சகம் கோவில்பட்டி*

*15. புலியூர் கேசிகன் ,(உரை ஆசிரியர் ) சிலப்பதிகாரம் பா.எ*

*பாரிநிலையம், சென்னை - 108. மறுபதிப்பு- 2002.*

*ஆய்விதழ் அனுப்ப வேண்டிய முகவரி*

*வீ. சௌந்தர்யா*

*1/127, B பிதப்புரம்,ரோடு, சாஸ்தா நகர்,*

*எட்டயபுரம் - 628902*

*Cell No 6382335621*

*E-Mail-ID – soundhariyadinesh@gmail.com*

********* ********* ********** ********* ********* ********** ********** **********